No. of Printed Pages : **12**

**5942**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# வரலாறு / HISTORY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I/PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

**1.** 1940 அக்டோபர் 17-ல் முதல் தனிநபர் சத்தியாகிரகத்தை தொடங்கியவர் ________.

(அ) வினோபா பாவே (ஆ) காந்தியடிகள்

(இ) திலகர் (ஈ) சுபாஷ் சந்திர போஸ்

On 17th October 1940, the individual Satyagraha was first started by ________.

(a) Vinobha Bhave (b) Gandhiji

(c) Tilak (d) Subhash Chandra Bose

**2.** 1942 -ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்டபோது இந்தியாவின் அரசப்பிரதிநிதி யார் ?

(அ) மௌண்ட்பேட்டன் பிரபு (ஆ) வேவல் பிரபு

(இ) வின்ஸ்டன் சர்ச்சில் (ஈ) லின்லித்கோ பிரபு

Who was the Viceroy of India when the Quit India Movement started in 1942 ?

(a) Lord Mountbatten (b) Lord Wavell

(c) Winston Churchill (d) Lord Linlithgow

**3.** இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர் :

(அ) A.O. ஹியூம் (ஆ) சுரேந்திரநாத் பானர்ஜி

(இ) W.C. பானர்ஜி (ஈ) பத்ருதீன் தியாப்ஜி

The first President of the Indian National Congress was :

(a) A.O. Hume (b) Surendranath Bannerjee

(c) W.C. Bannerjee (d) Badruddin Tyabji

**4.** இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது ?

(அ) ஜனவரி 26, 1930 (ஆ) டிசம்பர் 31, 1929

(இ) ஜனவரி 26, 1931 (ஈ) மார்ச் 12, 1930

When was the tri-colour flag of freedom hoisted ?

(a) January 26, 1930 (b) December 31, 1929

(c) January 26, 1931 (d) March 12, 1930

5. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் _________ ஆவார்.

(அ) இரண்டாம் கெய்சர் வில்லியம் (ஆ) யாமமோடோ

(இ) ஹிரோஹிடோ (ஈ) ஸ்கூஸ்னிக்

Japanese attack on Pearl Harbour was planned by _________.

(a) Kaiser William II (b) Yamamoto

(c) Hirohito (d) Schuschnigg

6. 'அரசின் தடையற்ற' (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் _________ ஆவார்.

(அ) ஃபிஷர் (ஆ) ஜான் A. ஹாப்சன்

(இ) கெளர்னே (ஈ) கார்ல் மார்க்ஸ்

Laissez Faire is a word coined by _________.

(a) Fischer (b) John A. Hobson

(c) Gournay (d) Karl Marx

7. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (1) | கான்பூர் சதி வழக்கு | (i) | அடிப்படை உரிமைகள் |
| (2) | மீரட் சதி வழக்கு | (ii) | சூரியா சென் |
| (3) | சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை | (iii) | 1929 |
| (4) | இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு | (iv) | 1924 |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஆ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Kanpur Conspiracy Case | (i) | Fundamental rights |
| (2) | Meerut Conspiracy Case | (ii) | Surya Sen |
| (3) | Chittagong Armoury Raid | (iii) | 1929 |
| (4) | Karachi Session of Indian National Congress | (iv) | 1924 |

(a) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(b) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(c) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(d) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

**8.** பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார் ?

(அ) எஸ்.ஏ. டாங்கே (ஆ) எம்.என். ராய்

(இ) ராம் பிரசாத் பிஸ்மில் (ஈ) பகத் சிங்

Who among the following was arrested in Kanpur Conspiracy Case ?

(a) S.A. Dange (b) M.N. Roy

(c) Ram Prasad Bismil (d) Bhagat Singh

**9.** மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் __________.

(அ) ஆந்திரா (ஆ) காஷ்மீர் (இ) ஒரிஸா (ஈ) அஸ்ஸாம்

The first State formed on Linguistic basis was :

(a) Andhra (b) Kashmir (c) Orissa (d) Assam

**10.** ''சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்'' - எனக் கூறியவர் :

(அ) சுபாஷ் சந்திர போஸ் (ஆ) பாலகங்காதர திலகர்

(இ) பாரதியார் (ஈ) தாதாபாய் நெளரோஜி

"Swaraj is my birth right and I shall have it," was said by :

(a) Subhash Chandra Bose (b) Bala Gangadhar Tilak

(c) Bharathiyar (d) Dadabhai Naoroji

**11.** பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது ?

(அ) மிண்டோ பிரபு - பல்கலைக் கழகச் சட்டம், 1904

(ஆ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்

(இ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

(ஈ) G. சுப்ரமணியம் - விடிவெள்ளிக் கழகம்

Which one of the following is correctly paired ?

(a) Lord Minto - The University Act of 1904

(b) Bankim Chandra Chatterjee - Anandmath

(c) Epicentre of militant nationalism - Madras

(d) G. Subramaniam - Dawn Society

**12.** **கூற்று :** வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

**காரணம் :** இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.

(அ) **கூற்று** சரி, **காரணம்** தவறு.

(ஆ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி, **காரணம் கூற்றை** விளக்குகிறது.

(இ) **கூற்று** தவறு, **காரணம்** சரி.

(ஈ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி, ஆனால் **காரணம் கூற்றை** விளக்கவில்லை.

**Assertion (A) :** V.O. Chidambaram established a Swadeshi Steam Navigation Company.

**Reason (R) :** He wanted to oppose the monopoly of the British in Navigation through the coast.

(a) **(A)** is correct and **(R)** is wrong.

(b) **(A)** and **(R)** are true and **(R)** is the correct explanation of **(A)**.

(c) **(A)** is wrong and **(R)** is correct.

(d) **(A)** and **(R)** are true and **(R)** is not the correct explanation of **(A)**.

**13.** பதினாறாம் லூயியின் அதிகாரப்பூர்வமான வசிப்பிடமாக இருந்தது :

(அ) மார்செய்ல்ஸ் (ஆ) வெர்செய்ல்ஸ்

(இ) டியூலரிஸ் (ஈ) தௌலன்

The official residence of Louise XVI was __________.

(a) Marseilles (b) Versailles

(c) Tuileries (d) Toulon

**14.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது ?

(அ) 2007 (ஆ) 2005 (இ) 2008 (ஈ) 2006

Mahatma Gandhi National Rural Employment Guarantee Act was passed in the year __________.

(a) 2007 (b) 2005 (c) 2008 (d) 2006

**15.** ஐக்கிய நாடுகள் சபை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது ?

(அ) 1946 நவம்பர் 24 (ஆ) 1944 அக்டோபர் 24

(இ) 1945 நவம்பர் 24 (ஈ) 1945 அக்டோபர் 24

The UNO came into existence on :

(a) 24th November 1946 (b) 24th October 1944

(c) 24th November 1945 (d) 24th October 1945

**16.** முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது ?

(அ) மராத்தி (ஆ) உருது (இ) பாரசீகம் (ஈ) இந்தி

During the Mughal period the official and court language was :

(a) Marathi (b) Urdu (c) Persian (d) Hindi

**17.** இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது ?

(அ) பிரான்ஸ் (ஆ) ஜெர்மனி

(இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (ஈ) ஜப்பான்

INA was founded with the help of :

(a) France (b) Germany

(c) USA (d) Japan

**18.** அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலப் படைகளுக்குத் தலைமை தாங்கியவர் :

(அ) வில்லியம் ஹோவே (ஆ) ரிச்சர்டு லீ

(இ) ராக்கிங்காம் (ஈ) ஜார்ஜ் வாஷிங்டன்

In the American War of Independence the British army was led by _________.

(a) William Howe (b) Richard Lee

(c) Rockingham (d) George Washington

**19.** தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவங்கப்பட்டது ?

(அ) பி.பி. வாடியா (ஆ) திலகர்

(இ) எச்.எஸ். ஆல்காட் (ஈ) அன்னி பெசண்ட்

The Home Rule Movement in South India was started by :

(a) B.P. Wadia (b) Tilak

(c) H.S. Olcott (d) Annie Besant

**20.** ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் கால வரிசைப்படுத்துக.

(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.

(2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.

(3) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழிவகுத்தது.

(4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.

(அ) (2), (4), (1), (3) (ஆ) (2), (1), (4), (3) (இ) (3), (2), (4), (1) (ஈ) (1), (3), (2), (4)

Arrange the different stages of Non-cooperation Movement in chronological order.

(1) The most heinous of political crime was perpetrated on an unarmed mass by the British regime at Amritsar town.

(2) Rowlatt Act was promulgated to imprison any person without trial by a law court.

(3) Chauri Chaura incident of Mob violence made Gandhi to announce the suspension of Non-cooperation Movement.

(4) A special session held at Calcutta resolved to accept Gandhi's proposal on non-cooperation with the colonial state.

(a) (2), (4), (1), (3) (b) (2), (1), (4), (3) (c) (3), (2), (4), (1) (d) (1), (3), (2), (4)

## பகுதி - II/PART - II

குறிப்பு : **ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30-க்கு கட்டாயம்** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Explain **any seven** questions briefly. Question No. **30** is **compulsory**.

**21.** தேசியம் என்றால் என்ன ?
What is Nationalism ?

**22.** மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' (The Mendicant Policy) என்றால் என்ன ?
What was called the Mendicant Policy of the Moderates ?

**23.** அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
Name the book and weekly published by Annie Besant.

**24.** காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர் ?
Who were the local leaders to accompany Gandhiji to Champaran ?

**25.** ''இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை'' என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன ?

Why is J.N. Tata called the 'Father of Indian Modern Industry' ?

**26.** ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.

State the main features of August Offer.

**27.** அரசமைப்பின் ஷரத்து 370-ன் முக்கியத்துவம் என்ன ?

What is the significance of Article 370 of the Constitution ?

**28.** வட அமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடி மக்கள் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின ?

What impact did the European settlement in North America make on the indigenous population ?

**29.** மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை ?

What was the essence of the Munich Agreement ?

**30.** முதல் உலகப்போரில் பங்கு பெற்ற மைய நாடுகளின் பெயர்களை எழுதுக.

Name the countries which remained as Central Powers during the World War I.

## பகுதி - III/PART - III

குறிப்பு : பின்வரும் வினாக்களில் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions shortly. Question No. **40** is **compulsory**.

**31.** மெக்காலேயின் ''இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை'' ஆய்க.

Analyse Macaulay's "Minute on Indian Education".

**32.** காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.

Give an account of the proceedings of Surat Session that ended in the split of the Congress.

**33.** மாற்றத்தை விரும்புபவர்கள், மாற்றத்தை விரும்பாதவர்கள் – வேறுபடுத்துக.

Point out the difference between pro-changers and no changers.

**34.** சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார் ?

Explain how Surya Sen organised the Chittagong Armoury Raid.

**35.** எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார் ?

What was the context in which Gandhi thought of Quit India Movement ?

**36.** இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை ?

What were the reasons for agricultural backwardness in India ?

**37.** ''1789 -ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது'' - விளக்குக.

Long before the revolution of 1789, there was a revolution in the realm of ideas. Explain.

**38.** அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது ?

How was Trench warfare fought ?

**39.** இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

Highlight the important results of the Second World War.

**40.** ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை குறிப்பிடுக.

What are the achievements of Five Year Plan ?

## பகுதி - IV/PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கு **விரிவான** விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன ?

**அல்லது**

(ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவங்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

(a) To what extent the repressive and racist policy measures of the British were responsible for the national awakening in India ?

**OR**

(b) Narrate the work done by two Home Rule movements one under Tilak and another under Annie Besant.

**42.** (அ) டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

**அல்லது**

(ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது ?

(a) Sketch the education career of Dr. B.R. Ambedkar with particular focus on his activism to secure social justice to the depressed classes.

**OR**

(b) Discuss Bhagat Singh's radical strand of nationalism and his revolutionary activism that led to his hanging.

**43.** (அ) இராஜாஜி திட்டம் பற்றி எழுதுக.

**அல்லது**

(ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன ? அவற்றை எவ்வாறு திறமையாக பட்டேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

(a) Write about the Rajaji proposals.

**OR**

(b) What were the problems in the merger of princely states with Indian Union and explain how they were ably handled by Patel and Nehru ?

**44.** (அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று ? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது ?

**அல்லது**

(ஆ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக்கூடியதாகவும் தெரிந்தது - இக்கூற்றினுக்கான ஆதாரப் பின்புலத்தை உறுதிப்படுத்துக.

(a) Why did Industrial revolution start in England first ? What impact did it make on modern society ?

**OR**

(b) The Treaty of Versailles was harsh and humiliating for Germany. Substantiate the statement.

**45.** (அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும் ஹிட்லரும் எந்த அளவுக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

**அல்லது**

(ஆ) அரபு - இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967-ல் பெரும்போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.

(a) Examine to what extent Germany and Hitler were responsible for the outbreak of Second World War ?

**OR**

(b) Discuss the origin of Arab-Israeli conflict and show how subsequent developments caused a major war between the two in 1967.

**46.** (அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

**அல்லது**

(ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

(i) கல்கத்தா

(ii) நாக்பூர்

(iii) டெல்லி

(iv) தூத்துக்குடி

(v) காஷ்மீர்

(a) Write about the role played by V.O. Chidambaram in Indian National Movement.

**OR**

(b) Mark the following places where Indian National Movement took place on the Outline Map of India.

(i) Calcutta

(ii) Nagpur

(iii) Delhi

(iv) Thoothukudi

(v) Kashmir

**47.** (அ) அமெரிக்க விடுதலைப் போரின் காரணங்களை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) 1920 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

(a) Explain the causes for the American War of Independence.

**OR**

(b) Draw a time-line from 1920 to 1950 and mark any five important events of Indian National Movement.

- o O o -